## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.18/2023

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.3 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 26.02.2026</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜேந்திரன் (PW–3) | வயது | : | 61 /2026 |
| க/த பெயர் | : | திரு. பிச்சைக்கண்ணு | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மூன்றாம் சேத்தி | வட்டம் | : | மன்னார்குடி |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வாதியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 50 வருடமாக தெரியும். வாதியானவர் தாவா சொத்தானது வெங்கட்ராமனுக்கு சொந்தம் என இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ள விபரம் சரியானதா அல்லது தவறானதா என்றால் தவறானது. தாவா சொத்து சம்பந்தமாக எந்தெந்த ஆவணத்தை பார்வையிட்டேன் என்றால் நாகப்பன் பெயரில் உள்ள பட்டா, அவரது மனைவி மல்லிகா பெயரில் மாற்றப்பட்ட பட்டா. நாகப்பனுக்கு எந்த தேதியில் வழங்கப்பட்ட பட்டாவை பார்த்தேன் என்றால் 2024 இல் வழங்கப்பட்ட பட்டாவை பார்த்தேன்.
2) 2024 க்கு முன் தாவா சொத்து சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை பார்த்தேனா என்றால் இல்லை. பஞ்சாயத்து யார் யாருக்கு இடையில் நடந்தது என்றால் சீனிவாசன் அவரது மூன்று மகன்களுக்கு இடையில் சீனிவாசனுக்கு சொந்தமான சொத்துக்களில் பாகப்பிரிவினை தொடர்பாக பஞ்சாயத்து நடந்தது. சீனிவாசனின் மூன்று மகன்கள் யார் யார் என்றால் சாமிநாதன், ராஜேந்திரன், நாகப்பன்.

3) யார் யாருக்கு எந்தெந்த சர்வே எண்ணில் சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டது என்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் சீனிவாசனுக்கு சொந்தமான சொத்துக்கள் என்பதற்கு மூல பத்திரம் எதாவது உள்ளதா என்றால் தெரியாது. பிரதிவாதி முருகேசனின் தாத்தா தான் சீனிவாசன் என்றால் சரிதான். முருகேசன் யாருடைய பிள்ளை என்றால் சாமிநாதனின் மகன். தாவா சொத்துக்களில் பிரதிவாதிக்கும் தாத்தா சொத்து என்ற முறையில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

4) தாவா சொத்துக்கள் பிரதிவாதி முருகேசனுக்கு உரிமையுள்ள சொத்துக்கள் என்றும் அதில் பிரதிவாதிக்கு எதிராக வாதி உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.23 17:35:26 +0530

District Munsif

Mannargudi.